23.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

# தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கும் புதிய நெல் ரகம்**

ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கும் வகையில், துத்தநாக (ஸிங்க்) சத்து நிறைந்த புதிய நெல் ரகத்தை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். சத்தீஸ்கர் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய நெல் வகையால், அந்த மாநிலத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் உள்ள 7 லட்சம் பழங்குடியின குழந்தைகள் பயனடையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "சத்தீஸ்கர் ஸிங்க் ரைஸ் - 1' என பெயரிடப்பட்டுள்ள இந்த நெல் ரகத்தை, எதிர்வரும் காரீஃப் பருவத்தில் இருந்து விவசாய நிலங்களில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூரில் உள்ள இந்திரா காந்தி வேளாண் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், துத்தநாகச் சத்து நிறைந்த 2 வகையான நெல் ரகங்களை உருவாக்கியுள்ளனர். அதில் முதல் ரகம் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவரும், பேராசிரியருமான கிரீஷ் சந்தேல் கூறியதாவது: கடந்த 2000-ஆம் ஆண்டில் சுகாதார இயக்கங்களுடன் இணைந்து மத்திய அரசு ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. அப்போது, மொத்த மக்கள்தொகையில் 60 முதல் 70 சதவீதம் பேர் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருப்பது தெரியவந்தது. குறிப்பாக, இரும்பு, துத்தநாகச் சத்து, வைட்டமின்-ஏ போன்றவை மக்களிடம் குறைவாக இருந்தன. இதைத் தொடர்ந்து நெல், கோதுமை, மக்காச்சோளம் ஆகிய 3 வகைப் பயிர்களின் தரத்தை உயர்த்த மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி, நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் சத்தீஸ்கரில் புது ரக நெல் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்ளத்

திட்டமிடப்பட்டது. 2003 முதல் 2005-ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட முதல்கட்ட ஆய்வில், அதிகச் சத்துடைய நெல் வகைகள் குறைவான விளைச்சலையே தருகின்றன என்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து 2006 முதல் 2011-ஆம் ஆண்டு வரை அடுத்தகட்ட ஆய்வு நடத்தப்பட்டது. இதில் நெல் வகைகளின் மரபுகளை மேம்படுத்தும் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இதன் விளைவாக துத்தநாகச் சத்து நிறைந்த 7 வகையான நெல் ரகங்கள் கண்டறியப்பட்டன. அதில் 4 வகையான நெல் ரகங்களைத் தரம் உயர்த்தும் நடவடிக்கை தொடங்கியது. அவற்றில் தற்போது 2 வகையான நெல் ரகங்கள் பயிரிடுவதற்குத் தயார் நிலையில் உள்ளன. விவசாயிகளுக்கு வழங்கப்படும்: தற்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய வகை நெல் ரகத்தில் 100 கிலோ விதைகள் உள்ளன. அவற்றை 10 ஏக்கர் நிலங்களில் பயிரிட்டு பன்மடங்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிறகு காரீஃப் பருவ சாகுபடியின்போது சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள 5,000 விவசாயிகளுக்கு புதிய ரக நெல் விதைகள் வழங்கப்படும் என்று சந்தேல் தெரிவித்தார். ஊட்டச்சத்துக் குறைபாட்டை போக்குவதுடன், கர்ப்பிணிப் பெண்களுக்குத் தேவையான சத்துகளும் புதிய வகை நெல்லில் இடம்பெற்றுள்ளதாக விஞ்ஞாணிகள் தெரிவித்துள்ளனர். அதனை நாடு முழுவதும் பள்ளிகளில் அமலில் இருக்கும் சத்துணவுத் திட்டத்தில் சேர்க்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக்கூறப்படுகிறது.

## விளைச்சல் குறைவால் இலவம் பஞ்சு விலை உயர்வு: தொழிலாளர்கள் பாதிப்பு

போடி பகுதியில் குறைவான விளைச்சல் காரணமாக இலவம் பஞ்சு விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ள நிலையில் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

போடி பகுதியில் ஏலக்காய்க்கு அடுத்து அதிகம் விளைவது இலவம் பஞ்சு. இங்கு அத்தியூத்தி, அகமலை, ஊத்தாம்பாறை, வலசத்துறை, பிச்சங்கரை, வடக்குமலை, முந்தல், குரங்கனி, கொட்டகுடி உள்ளிட்ட பகுதிகளில் இலவம் மரங்கள் அதிகம் உள்ளன. இந்த இலவம் பஞ்சு வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்திய ராணுவத்துக்கும், கதர் வாரியத்துக்கும் இங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இங்குள்ள 50-க்கும் மேற்பட்ட இலவம் பஞ்சு பேட்டைகளில் காய்களை அரைத்து பஞ்சு தனியாகவும், கொட்டை தனியாகவும் பிரிக்கப்படுகிறது. இதில் முதல் தர பஞ்சு ஏற்றுமதியாகிறது. அத்துடன் இப்பகுதியில் இலவம் பஞ்சால் தரமான மெத்தை, தலையணை தயாரிக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பும் தொழிலும் நடைபெற்று வருகிறது. இந்த தொழிற்பேட்டைகளால் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இப்பகுதியில் இலவம் பஞ்சு சீசன் மார்ச் மாதம் தொடங்கி மே வரை நீடிக்கும். இந்த ஆண்டு பருவ மழை தவறி பெய்ததால் இலவம் பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால் இலவம் காய்கள் விளைச்சல் குறைந்து, பஞ்சு விலை அதிகரித்துள்ளது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கொட்டை நீக்காத இலவம் பஞ்சு ஒரு கிலோ ரூ.115-க்கும், கொட்டை நீக்கப்பட்ட தரமான பஞ்சு கிலோ ரூ.350 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சல் இல்லை என்ற கவலை இருந்தாலும், ஏற்கனவே இருப்பில் வைத்துள்ள இலவம் பஞ்சுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் கருவிகள்**

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மைத் துறை சார்பில், விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் கருவிகளை ஆட்சியர் க. நந்தகுமார் வெள்ளிக்கிழமை வழங்கினார். வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஒன்றியங்களிலும் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைத்தல் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக முதுகுளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பெ. பொன்னுச்சாமி என்ற விவசாயிக்கு ரூ. 10 லட்சம் மானியத்தில் உழுவை இயந்திரங்கள், சுழல் கலப்பைகள், விதை விதைக்கும் கருவிகள், வைக்கோல் கட்டும் கருவி உள்ளிட்ட 11 வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் வழங்கினார். இவை தவிர, தோட்டக்கலைத் துறையின் சார்பில் பண்ணைமயமாக்கல் திட்டத்தின் கீழ், ரூ. 3 லட்சம் மானியத்தில் இரு மினி டிராக்டர்கள், இரு பவர் டில்லர்களையும், கமுதி, பரமக்குடி, நயினார்கோவில் உள்ளிட்ட வட்டாரங்களைச் சேர்ந்த 4 விவசாயிகளுக்கு ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ. கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைப் பொறியியல் துறைச் செயற்பொறியாளர் எம். யுவராஜ், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் வி. கங்காதரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**"விவசாயிகளை ஒருங்கிணைத்து புதிய அமைப்பு தொடக்கம்'**

நாடு முழுவதும் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து "விவசாயிகள் மகா பஞ்சாயத்து' என்னும் புதிய அமைப்பு தொடங்கப்பட்டுள்ளதாக இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் பி.கே.தெய்வசிகாமணி தெரிவித்தார். இதுகுறித்து அவர் ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு

வெள்ளிக்கிழமை அளித்த பேட்டி: விவசாயிகள் கடன் உள்ளிட்ட பல பிரச்னைகள் காரணமாக தற்கொலை செய்யும் சம்பவம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் நாடு முழுவதும் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். 10 கோடி விவசாயிகள், விவசாயத்தை விட்டு வெளியேறி நகரங்களில் கூலி வேலை செய்து வருகின்றனர். வங்கிகளில் பெற்ற கடனை விவசாயிகளால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனிடையே, விவசாய நிலத்தை அபகரிக்க நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும். இதுபோன்ற பிரச்னைகளை எதிர்த்து விவசாய சங்கங்கள் தனித் தனியாகப் போராடி வருகின்றன. இந்த விவசாய சங்கங்களை ஒருங்கிணைத்து போராடும் வகையில் "விவசாயிகள் மகா பஞ்சாயத்து' என்னும் அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. கர்நாடகம், கேரளம், தமிழகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கான "மகா பஞ்சாயத்து' கூட்டம், ஈரோடு பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் ஹோட்டலில் மே 25-ஆம் தேதி நடைபெறவுள்ளது என்றார். பேட்டியின்போது, கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சூலூர் சுரேஷ், தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் உடனிருந்தனர்.

**தொடர் மழையால் பசு மாடுகளுக்கு மடி நோய் பாதிப்பு**

நாமக்கல் மாவட்டத்தில் நிலவும் மாறுபட்ட சீதோஷ்ண நிலையால் பசு மாடுகளுக்கு மடிநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நோய் பாதித்த பசு மாடுகள் சரியாக உணவு சாப்பிடாமல், மடி வீக்கம், மடி இறுக்கமாக இருக்கும். இதனால் பால் உற்பத்தி குறையும். தொடர் மழை, வெயில் போன்ற காலச்சூழ்நிலையால் மாடுகளுக்கு குந்துக் காய்ச்சல் என அழைக்கப்படும் வைரஸ் காய்ச்சல் பாதிப்பும் ஏற்படுகிறது. இந்தக் காய்ச்சலால் மாடுகள் மூட்டு வீக்கம் மற்றும் நிற்க முடியாமல் படுத்துக் கொள்ளும். சரியாக உணவு எடுத்துக் கொள்ளாது. தற்போது நாமக்கல்

மாவட்டத்தில் பல இடங்களில் கால்நடைகளுக்கு இதுபோன்ற பாதிப்பு ஏற்படுகிறது. இதுகுறித்து கால்நடைத் துறை அதிகாரி ஒருவர் கூறியது: இந்தப் பாதிப்பு இருந்தால் கால்நடைகளை முதலில் நல்ல காற்றோட்டம், சுகாதாரமான இடத்தில் வைத்து பராமரிக்க வேண்டும். மாட்டின் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் குளிக்க வைக்க வேண்டும். உடலில் உண்ணி, ஈ ஒட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கால்நடைகளுக்கு விரைவாக சிகிச்சை அளித்தால் மூன்று நாள்கள் முதல் ஒரு வாரத்தில் சரியாகி விடும் என்றார்.

**ஜவ்வரிசி ஆலைகளில் சோதனை நடத்த விவசாயிகள் வலியுறுத்தல்**

ஆந்திர மாநிலத்தில் கலப்படம் செய்த 42 ஜவ்வரிசி ஆலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி ஆலைகளில் சோதனை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விவசாயிகள் கோரிக்கை விவரம்: சேந்தை தங்கம்: நாமக்கல் மாவட்டத்தில் நில அளவைத் துறையில் காலிப் பணியிடங்கள் இருப்பதால், நில அளவைக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் மாதக் கணக்கில் காத்திருக்கும் நிலை உள்ளது. ஆட்சியர்: நாமக்கல் மாவட்டத்தில் நில அளவைத் துறையில் 50 சத அளவுக்கு காலிப் பணியிடங்கள் உள்ளன. அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் காலியிடங்கள் நிரப்பப்படும் வரை, தாற்காலிக அடிப்படையில் ஓய்வு பெற்ற நில அளவையாளர்களை நியமனம் செய்துகொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால், நில அளவையில் ஏற்படும் காலதாமதம் வரும் காலங்களில் குறையும். நல்லா கவுண்டர்: கரும்புக்கான அரசு அறிவித்த விலையை வழங்க தனியார் ஆலைகளுக்கு தமிழக அரசு நெருக்கடி கொடுக்க வேண்டும். மேலும், கரும்பு கட்டுப்பாட்டுச் சட்டம் 2010-ஆம்

ஆண்டு திருத்தத்துக்கு முன், ஆலைகள் லாபத்தில் விவசாயிகளுக்கு பங்கு அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2004-2009 காலத்துக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள லாப பங்குத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். நடேசன்: வெட்டிய கரும்புக்கு 14 நாள்களுக்குள் முழு தொகையையும் விவசாயிக்கு வழங்க வேண்டும் என கரும்பு கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிபாளையம் பொன்னி சர்க்கரை ஆலையில், 3 மாதங்களாகியும் விவசாயிகளுக்கு இதுவரை ரசீது கூட அனுப்பவில்லை. ஆட்சியர்: லாப பங்கு குறித்த உரிய ஆவணங்களை அளித்தால் ஆலை நிர்வாகங்களோடு பேசி தீர்வு காணப்படும். வெட்டிய கரும்புக்கு 14 நாள்களில் பணத்தை கொடுக்க வேண்டும் என ஆலை நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்படும்.

சுந்தரம்: பால் உற்பத்தியாளர்களிடம் முழுமையாக பால் கொள்முதல் செய்யப்படாததால், விவசாயிகள் கடும் பாதிப்புள்ளாகியுள்ளனர். உள்ளூர் பிரச்னைகளினால் சில இடங்களில் பால் கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டுள்ளன. ஆவின் அதிகாரி: நாமக்கல் மாவட்டத்தில் இருந்து ஆவின் மூலம் தினமும் 50 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்து, குளிரூட்டப்பட்டு அனுப்பும் வசதி உள்ளது. ஆனால், இப்போது தினமும் 56 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தரமான பால் தொடர்ந்து கொள்முதல் செய்யப்படும். ஆட்சியர்: உள்ளூர் அரசியல் பிரச்னைகளினால் சிலர் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றனர். சட்டத்துக்கு புறம்பான செயல்களில் ஈடுபடும் நபர்கள் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சந்திரசேகர்: கலப்படம் செய்ததாக ஆந்திர மாநிலத்தில் உள்ள 42 ஜவ்வரிசி ஆலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதால், அங்குள்ள மரவள்ளிக்கிழங்கு தமிழகத்துக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள

ஜவ்வரிசி ஆலைகளில் கலப்படம் செய்வதாக கூறப்படுவதால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி ஆலைகளில் கலப்படத்தை தடுக்க சோதனையை தீவிரப்படுத்த வேண்டும்.

**இலக்கை விஞ்சிய சாகுபடிக்கு நடவடிக்கை தேவை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் சாகுபடிப் பரப்பில் இலக்கை விஞ்சும் அளவுக்கு வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் ஆட்சியர் என். சுப்பையன். தஞ்சாவூர் உழவர் சந்தைக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, விதைச் சான்றுத் துறை ஆகியவற்றின் ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது: வேளாண்மைத் துறை அலுவலர்கள் துறை சார்ந்த திட்டங்களைக் கடைகோடி விவசாயிகளுக்குக் கொண்டு செல்வதற்குத் தகுந்தாற்போல் தங்களுடைய செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நவீன முறைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். திருந்திய நெல் சாகுபடி திட்டத்தை விரிவுபடுத்தி அனைத்து பகுதிகளிலும் செம்மையாக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உணவு தானியப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள், ஊடுபயிர்கள், பணப் பயிர்கள் சாகுபடிப் பரப்பை ஒவ்வொரு ஆண்டும் இலக்கை விஞ்சி சாதனை புரிய வேண்டும். மாவட்ட அலுவலர்கள் மாநில அளவில் உணவு உற்பத்தியில் இலக்கை விஞ்சி சாதனை புரியும் வகையில் பாடுபட வேண்டும். காலம் காலமாக விவசாயிகள் லாபம் பெற முடியாத நிலையை மாற்றி விவசாயம் ஒரு லாபகரமான தொழிலாக முன்னேறுவதற்கு வேளாண்மைத் துறை அலுவலர்கள், விஞ்ஞானிகள் சிறப்பாகச் செயல்பட்டு நவீன முறைகளைக் கையாண்டு சாகுபடி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர்.

**மே 29-ல் நாகைமாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 29ஆம் தேதி நடைபெற உள்ளது.இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 29ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியரக முதன்மை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமை வகிக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை அளித்து பயன் பெறலாம்.

**விவசாயிகளுக்கு பயிர்க் கடன் முகாம் நடத்த வேண்டும்: ஆட்சியர்**

விவசாயிகளுக்கு ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் பயிர்க் கடன் வழங்கும் முகாம் நடத்த வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற வங்கியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் வங்கியாளர்கள் ஒத்துழைப்போடு கல்விக் கடன் முகாம் மற்றும் பயிர்க் கடன் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களின் மூலம் மாணவ, மாணவிகள் உயர்க் கல்வி பெற உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், நிகழாண்டுக்கான கல்விக் கடன் முகாம் மற்றும் பயிர்க் கடன் முகாம்கள் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

தொடர்ந்து, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் தெரணி, புது ஆத்தூர், லாடபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 4 பேருக்கு கோழிப்பண்ணை அமைக்க வங்கி கடனுதவியாக ரூ. 27,60,112 வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், சார் ஆட்சியர் ப. மதுசூதன்ரெட்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அருள்தாசன், சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி மேலாளர் கே. ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**மே 28-ல் திருவாரூர்மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மே 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஆட்சியர் அலுவலகத்தில் மே 28-ம் தேதி காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது நிறை, குறைகளைத் தெரிவிக்கலாம்.

**குமரியில் வேளாண் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

குமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண் பணிகளை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

நாகர்கோவில் கோணம் பகுதியில் வேளாண் பொறியியல் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் பயிற்சி மற்றும் தகவல் மையத்தை ஆட்சியர் பார்வையிட்டார். மேலும், இறச்சகுளம் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளாவடிக்கால் பகுதி, புத்தேரி நெடுங்குளத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட உடைப்பு மற்றும் நாற்றங்கால் வெள்ளத்தில் மூழ்கியதையும் அவர் பார்வையிட்டார்.

குருந்தன்கோடு வட்டம் தோட்டியோடு பகுதியில் மண்மாதிரி முகாம், மேலக்கருப்புக்கோட்டில் இயந்திர நடவு, கிள்ளியூர் வட்டம் மிடாலக்காட்டில் சூரியஒளி பம்ப் செட் நிறுவப்பட்டதையும் ஆய்வு செய்தார். அதே பகுதியில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் கோகோ முதலாம் ஆண்டு சாகுபடியையும் அவர் ஆய்வு செய்தார்.

ஆட்சியருடன் வேளாண் இணை இயக்குநர் (பொ) பொன்காத்தபெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் (பொ) ஆனந்தராஜா, தோட்டக்கலைத் துணை இயக்குநர் சிவகுமார், வேளாண் உதவி இயக்குநர்கள் ராஜ்குமார், வாணி, ஷீலா ஜான், உதவிப் பொறியாளர்கள் நடராஜன், ராதாகிருஷ்ணன், வேளாண் அலுவலர்கள் சந்திரபோஸ், செல்வராஜ் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

**ரப்பர் கொட்டையிலிருந்து பயோடீசல் தயாரிக்கும் தொழிற்சாலை: குமரியில் அமைக்க வலியுறுத்தல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மரக் கொட்டையிலிருந்து பயோடீசல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.பெட்ரோலிய எரிபொருள்களுக்கு மாற்றாக, புதுப்பிக்கவல்ல மாற்று எரிசக்தியின் தேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவற்றுள் மிக முக்கியமானது ரப்பர் கொட்டையிலிருந்து பயோடீசல் உற்பத்தி செய்யும் முறையாகும். இந்த முறை பெட்ரோலியப் பொருள்களுக்கு சிறந்த மாற்றாக இருக்கும் என அறிவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். ரப்பர் கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் பயோடீசல், வழுவழுப்புத் தன்மை கொண்டுள்ளதால் என்ஜின்கள் இலகுவாகவும், அதிக நாள்கள் இயங்கும் தன்மையும் பெறுவதால் பல நாடுகளில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இது குறித்து நாகர்கோவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய நிறுவன இயக்குநர் எஸ்.பிரகாஷ் கூறியதாவது: ரப்பர் மரங்கள் நடப்பட்டு 13 ஆம் ஆண்டிலிருந்து 25 ஆம் ஆண்டு வரை ரப்பர் கொட்டைகளை அறுவடை செய்ய இயலும். ஒரு ஹெக்டேர் ரப்பர் மரங்களிலிருந்து ஒரு டன் கொட்டைகள் பெறப்படுகின்றன. ஒவ்வொரு விதையும் 6 கிராம் வரை எடையிருக்கும். இதில் 47 சதவீதம் எண்ணெய் சத்து அடங்கியுள்ளது. எனவே ரப்பர் கொட்டையிலிருந்து தயாரிக்கும்

பயோடீசல் பயனளிக்கும் என கருதப்படுகிறது. உலக அளவில் 6 ஆவது இடத்திலிருக்கும் இந்தியாவில், சுமார் 2,24,000 ஹெக்டேரில் ரப்பர் மரம் பயிரிடப்படுகிறது. குமரி மாவட்டத்தில் 20 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் மரங்கள் பயிரிடப்படுகின்றன.

மேலும், உலகளவில் ஆண்டுக்கு 40 லட்சம் டன் ரப்பர் கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்போது ரப்பர் கொட்டையிலிருந்து பயோடீசல் தயாரிக்கும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆமணக்கு விதைகள், கழிவு எண்ணெய்கள், பாசிகள் மற்றும் விலங்குகளின் கொழுப்புகளிலிருந்து பெறப்படும் பயோடீசலின் தரத்தை விட ரப்பர் கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் டீசல் தரம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.குமரி மாவட்டத்தைப் பொருத்தவரை ரப்பர் மரத்திலிருந்து ரப்பர் மட்டுமே அதிகமாகப் பெறப்படுகிறது. இப்போது இம்மரத்தின் அனைத்துப் பகுதிகளும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அதாவது ரப்பர் பால், மரச் சாமான்கள், ரப்பர் எண்ணெய், ரப்பர் கொட்டைப் பிண்ணாக்கு, பயோடீசல் உள்ளிட்ட பொருள்கள் பெறப்படுகின்றன.எனவே, குமரி மாவட்டத்தில் ரப்பர் பயோடீசல் தொழிற்சாலைகள் அமையும் பட்சத்தில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்றார் அவர்.

**மீன் பொருள்களை சந்தைப்படுத்துதல் பயிற்சி**

தூத்துக்குடியில் மீன் மற்றும் மீன் பொருள்களை சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன்வளப் பொருளியல் துறை சார்பில் மேட்டுப்பட்டியில் மீன் மற்றும் மீன் பொருள்களை சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் சுயஉதவிக் குழு பெண்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியில் கலந்துகொண்ட பெண்களுக்கு கல்லூரியின் மீன் பதன தொழில்நுட்பத் துறை தலைவர் து. சுகுமார் சான்றிதழ்களை வழங்கிப்

பேசினார். இதில், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையின் இப்போதைய நிலைப்பாடுகள், விலை நிர்ணயம் மற்றும் மேம்படுத்தப்பட்ட முறையில் மீன் மற்றும் மீன் பொருள்களை சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதேபோல் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியுதவியுடன் கோவில்பட்டியில் இறால் ஊறுகாய் கொண்டு நுகர்வோர் விருப்பம் மற்றும் தரவரிசைக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மீன் கட்லெட் தயாரிக்கப்பட்டு அவற்றை சந்தைப்படுத்துதலின் நுணுக்கங்கள் குறித்தும் விளக்கப்பட்டன.

**விவசாயிகள் வாங்கும் இடுபொருள்கள் குறித்து எஸ்.எம்.எஸ் தகவல்**

திருநெல்வேலி மாவட்டத்தில், வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகள் வாங்கும் இடுபொருள்கள் குறித்த தகவல்கள் விவசாயிகளின் செல்லிடப்பேசிக்கு உடனடியாக குறுந்தகவல் அனுப்பும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் வாங்கும் இடுபொருள்கள் பட்டியலிட்டதும் உடனடியாக அந்த விவசாயிக்கு அவரது செல்லிடப்பேசி எண்ணில் குறுந்தகவல் அனுப்பும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வேளாண் இடுபொருள்கள் சரியான நபரை சென்றடைகிறது என்பது உறுதி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் 19 முதன்மை வேளாண் விரிவாக்க மையங்கள், 31 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் உள்பட 50 மையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து விரிவாக்க மையங்களுக்கு கணினி வழங்கப்பட்டு இணையதள வசதி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் வாங்கும் இடுபொருள்களுக்கு இணையதளம் மூலம் பட்டியலிட்டு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த விவசாயி கையேடு வைத்திருக்கும் விவசாயிகள் மட்டும் பாசனத்துக்குத் தேவையான இடுபொருள்களை பெற முடியும். விவசாயிகள் அனைவருக்கும் தனி குறியீடு எண்

வழங்கப்பட்டு இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டு எண்ணை பயன்படுத்திதான் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் பொருள்களை வாங்க முடியும். திருநெல்வேலி மாவட்டத்தில் 19 வட்டாரங்களில் 2.78 லட்சம் பண்ணை குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த விவசாயி கையேடுகள் வழங்கப்பட்டு, அதன்படி விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த இடுபொருள்கள் விநியோக மேலாண் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வாங்கும் இடுபொருள்களுக்கு இணையதளம் மூலம் பட்டியலிட்டு குறுந்தகவல் அனுப்பும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

**மீன் வளத்தைப் பெருக்க கடலில் செயற்கை பவளப் பாறைகள்**

மீன்வளத்தைப் பெருக்க செயற்கை பவளப்பாறைகள் உருவாக்கப்பட்டு, சிதம்பரம் அருகே கடல் பகுதியில் 500 சதுர மீட்டர் பரப்பளவில் 10 கி.மீ. தொலைவில் இறக்கப்பட்டன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பிளாண்ட் தொண்டு நிறுவனம், உள்ளூர் மீனவர்கள் பங்கேற்போடு கடல் மீன் வளமும், மீனவர் வாழ்வாதாரமும் மேம்படக்கூடிய செயற்கை பவளப்பாறைகளை கடலில் அமைத்து பல்லுயிர் பெருக்கம், கடல் சுற்றுச்சூழல் வளம் காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கூட்டு நிதியுதவி: இதனடிப்படையில், சிதம்பரம் அருகே பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் உள்ள சி.புதுப்பேட்டை பகுதியில், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் பருவநிலை மாற்றப்பிரிவு, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம், பூகோள சுற்றுச்சூழல் மையம் ஆகிய நிறுவனங்கள் கூட்டு நிதி உதவியுடன் செயற்கை பவளப்பாறைகளின் கட்டுமானப் பணி கடந்த 21-8-2014 அன்று மீன்வளத் துறை இயக்குநர் செல்வம் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி பிளாண்ட் தொண்டு நிறுவனம் முக்கோணம், வட்டம் மற்றும் செவ்வக வடிவங்களில் சுமார் 210 கான்கிரீட் உருவமைப்புகளை தயார் செய்தது. அவை மேற்கண்ட

பகுதியில் கரையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் சுமார் 500 சதுர மீட்டர் பரப்பளவில் சூரிய ஒளி கிடைக்கப்பெறும் வகையில் 15 மீட்டர் ஆழத்தில் சமதள தரையில் போடப்பட்டு, செயற்கை பவளப்பாறைகளாக உருவாக்கப்படவுள்ளன. 6 மாதங்களில் மீன்வளம்: இந்த கான்கிரீட் உருவமைப்புகளில் நாளடைவில் நுண்ணுயிர் பாசிகள் படர்ந்து அவற்றை கவலை, மத்தி, பாறை போன்ற மீன் வகைகள் உண்ணுவதன் மூலம் அவை பன்மடங்கு வளரும். பவளப்பாறை உருவான 6 மாதங்களில் மீன்வளம் பெருகுவதுடன், இரைக்கான மீன்கள் படையெடுத்து அங்கேயே குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் நடைபெறும். இதனால் குறுகிய தொலைவில் மீன்வளம் பெருக்கத்தால் மீனவர்கள் பெரிய அளவில் பலன் அடைவர். கடலில் இறக்கப்பட்ட கான்கிரீட்: இந்நிலையில், கான்கிரீட் உருவமைப்பான செயற்கை பவளப்பாறைகளை கடலில் இறக்கும் நிகழ்ச்சி சி.புதுப்பேட்டை மீனவர்களால், பரங்கிப்பேட்டையில் அமைத்துள்ள அன்னங்கோயில் துறைமுகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சுற்றுச்சூழல் கல்வி மைய தெற்கு பிராந்திய மேலாளர் பிரதாப் சிங் தலைமை வகித்தார். கடற்கரையில் சிறப்பு வழிபாட்டுக்கு பின்னர் மீனவர்கள் பைபர் படகுகள் மூலம் செயற்கை பவளப்பாறைகளை கடலுக்கு கொண்டு சென்றதை பிரதாப் சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பிளாண்ட் தொண்டு நிறுவனத் தலைவர் ரா.த.ஜான்சுரேஷ், ஒருங்கிணைப்பாளர் ஆண்டோ ஆசீர்வாதம், சி.புதுப்பேட்டை கிராமத் தலைவர் வேலு, சின்னூர் தெற்கு, வடக்கு விசைபடகு தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தேசிய உயிரியல் பூங்காவில் ராட்சத "நீர் உடும்பு'**

பார்வையாளர்களைக் கவரும் வகையில், தில்லி தேசிய உயிரியல் பூங்காவுக்கு முதல் முறையாக நான்கு ராட்சத "நீர் உடும்பு'கள் கொண்டு

வரப்பட்டுள்ளன. மேலும், "நான்கு கொம்பு' கொண்ட அரிய வகையைச் சேர்ந்த மூன்று மான் குட்டிகளும் புதிய வரவாக வந்துள்ளன.

இதுகுறித்து தேசிய உயிரியல் பூங்காவின் மூத்த வன விலங்கு மருத்துவர் ந.பன்னீர்செல்வம் "தினமணி' நிருபரிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

"விலங்குகள் பரிமாற்றத்தின் அடிப்படையில், ஒடிஸா மாநிலம், புவனேசுவரம் தேசிய உயிரியல் பூங்காவில் இருந்து தலா இரண்டு ஆண், பெண் ராட்சத "நீர் உடும்புகள்', ஓர் ஆண், 2 பெண் என "நான்கு கொம்புகள்' கொண்ட அரிய வகை மான் குட்டிகள் தில்லி தேசிய உயிரியல் பூங்காவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்குப் பதிலாக தில்லி தேசிய உயிரியல் பூங்காவில் இருந்து மணிப்பூரி வகையைச் சேர்ந்த 2 ஆண், 3 பெண் மான்கள் புவனேசுவரம் தேசிய உயிரியல் பூங்காவுக்குக் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தற்போது புது வரவாக கொண்டு வரப்பட்டுள்ள ராட்சத "நீர் உடும்பு', சுமார் 8 கிலோ எடை கொண்டதாகும். இவற்றுக்குச் சராசரியாக 3 முதல் 4 வயது வரை ஆகின்றன. இவை 4 முதல் 5 அடி வரை நீளம் உடையவை.

நீர் நிலைகளை அடுத்துள்ள அடர்ந்த காடுகளில் வசிக்கக்கூடிய இந்த வகை நீர் உடும்புகளின் ஆயுள்காலம் சராசரியாக 30 ஆண்டுகள் ஆகும். இந்த உடும்புகளுக்குப் பெரும்பாலும் மீன், எலி, தவளை போன்றவை உணவுகளாக வழங்கப்பட்டு வருகின்றன. நீர் உடும்புகள் குறைந்த அளவு விஷத் தன்மை கொண்டவை. இதனால், "அலர்ஜி' நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. தற்போது இந்த நீர் உடும்புகள் ஊர்வன இல்லத்தில் பொதுமக்களின் பார்வைக்காக விடப்பட்டுள்ளன.

இதேபோல "நான்கு கொம்பு' மான்குட்டிகள், அரிய வகையைச் சார்ந்தவை. ஏற்கெனவே தில்லி உயிரியல் பூங்காவில், சத்தீஸ்கர் மாநிலம், பிலாஸ்பூர் தேசிய உயிரியல் பூங்காவில் இருந்து கொண்டு வரப்பட்டது. இவற்றின் ஆயுள்காலம் சராசரியாக 12 ஆண்டுகள் ஆகும்.

தற்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்த மான்களில் ஆண் மானுக்கு 2 வயதும், பெண் மானுக்கு 3 வயதும் ஆகின்றன.

இதற்கு உணவாக பசும்புல், இலைகள், மான்களுக்கு வழங்கப்படும் தீவனம் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவற்றுக்கு மருத்துவப் பராமரிப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு விடப்படும்' என்றார் பன்னீர்செல்வம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வகை வகையாய் வானவில் வண்ணச்சோறு**

கோடை கொண்டாட்டம் முடிந்து பள்ளிகள் அடுத்தவாரம் துவங்க உள்ளன. வீட்டில் இருந்தவரை இஷ்டம் போல் விளையாடி, நினைத்த நேரத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள், பள்ளி துவங்கிய பின் காலை சாப்பாட்டில் சுணக்கம் காட்டுவர். 'பிடிக்கவில்லை, பசிக்கவில்லை' என்று ஒற்றை வரியில் டென்ஷன் செய்வர். மதியம் கொடுத்துவிடும் டிபனை திறந்து கூட பார்க்காமல் அப்படியே வீட்டுக்கு கொண்டு வருவர். உணவை தவிர்க்கும் பிள்ளைகளால் படிப்பில் சரியாக கவனம் செலுத்த முடியாது. எனவே சத்தான உணவை குழந்தைகளுக்கு பிடித்தமான விதத்தில் சமைத்து கொடுக்க வேண்டும்.

விதவிதமான உணவுகள் சமைப்பது குறித்து, மதுரை யைச் சேர்ந்த குடும்பத்தலைவி சுஜாதா கூறியதாவது: பள்ளி துவங்கிய பிறகு, அம்மாக்கள் சந்திக்கும் ஒரே பிரச்னை, காலை நேரத்தில் பிள்ளைகள் உணவை தவிர்ப்பது தான். காலையில் முந்திரி, திராட்சை, பாதாம், பிஸ்தா உலர் பருப்புகளை கொஞ்சம் கொடுத்து பால் கொடுத்து அனுப்பலாம். உலர் திராட்சையை தின்பண்டமாகவும் தரலாம். எளிய

முறையில் ரொட்டியுடன் ஆம்லெட் செய்து தரலாம். சாப்பிடுவதற்கும் இலகுவாக இருக்கும். புரோட்டீன் சத்து நிறைந்த பயறு வகைகளை வேகவைத்து கொடுக்கலாம். சப்பாத்தி, பூரியுடன் சோயா, கொண்டைகடலை குருமா செய்து கொடுக்கலாம். சிறுதானியங்களுடன் பனீர், பயறு மசாலா சேர்த்து தரலாம். வானவில் வண்ணச் சோறு: காலையில் சாப்பிட டிபன் கொடுத்து விட்டால், மதியம் கொஞ்சமாக சாதம் தரலாம். உங்கள் குழந்தைகளுக்கு உதிரியாக சாதம் பிடிக்குமா இல்லை குழைய வேகவிட வேண்டுமா என்பதை முடிவு செய்யுங்கள். சாதத்தை தனியாக வேகவைத்து எடுக்க வேண்டும். வெங்காயம், பச்சை மிளகாய் வதக்கி தாளித்து, முருங்கைபீன்ஸ் வேகவைத்து அதனுடன் சாதத்தை கிளறினால் பச்சையும், வெள்ளையுமாய் சாதம் அழகாகத் தெரியும். கேரட்டை துருவி வேகவைத்து இதேபோல தாளித்து கொட்டலாம். கீரைவகைகளில் முருங்கைகீரை, அரைக்கீரையை அப்படியே சாதத்துடன் சேர்க்கலாம். பாலாக்கீரை, பொன்னாங்கன்னி, மணத்தக்காளி கீரையை பாசிபருப்பு சேர்த்து கூட்டு போல சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம். பீட்ரூட்டை தனியாக வதக்கி கொடுக்கலாம். சாதத்துடன் கலக்கும் போது சில குழந்தைகளுக்கு அந்த நிறம் பிடிக்காமல் போகும். கடுகு, உளுந்து, சிறுஞ்சீரகம், மிளகு, வெங்காயம், பச்சை மிளகாய் தாளித்து சாதத்தில் கிளறினால் ருசியாக இருக்கும்.

### மசாலா சாதங்கள்:

பட்டர் பீன்ஸ், சோயா பீன்ஸ் உடன் தேங்காய் கலக்காமல் தக்காளி மட்டும் சேர்த்து வேகவைத்து சாதத்துடன் பிசைந்து கொடுக்கலாம். தேங்காய் சேர்த்து சமைத்தால் சில நேரங்களில் சலித்து விடும். முட்டையை தேவைப்பட்டால் காலையில் சாப்பிடும் போது கொடுக்கலாம். மூன்று மணி நேரத்திற்கு மேல் டிபனில் இருந்தால் சுவைக்காது, நல்லதும் இல்லை. அசைவ உணவை வீட்டில் இருக்கும் போது தரலாம் என்றார்.

## பழக்கண்காட்சி இன்று துவக்கம்

குன்னூர்: நீலகிரி மாவட்டம், குன்னூர் சிம்ஸ் பூங்காவில், இன்று பழக்கண்காட்சி துவங்குகிறது. இதற்காக தோட்டக்கலை துறையினர், பல ரக பழங்களால் ஆன, அலங்கார அமைப்புகளை உருவாக்கி உள்ளனர். காட்டெருமை, நீலகிரி லங்கூர் ஆகிய வடிவங்கள், பார்வையாளர்களை கவர்கின்றன. பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த, செயற்கை நீரூற்று புதுப்பொலிவு பெற்றுள்ளது.

## சிறுதானிய உணவுதயாரிப்பு பயிற்சி

மதுரை:மதுரை ரூட்செட் பயிற்சி நிலையத்தில் ஜூன் முதல் வாரத்தில், சிறுதானிய உணவு பொருட்கள், மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரிப்பு குறித்த இலவச பயிற்சி 10 நாட்கள் நடக்கிறது.பயிற்சி பெற விரும்பும் 18 - 45 வயதுக்குட்பட்ட, குறைந்தது எட்டாவது படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். மே 30க்குள் அனுப்ப வேண்டிய முகவரி: இயக்குனர், ரூட்செட், விமான நிலைய சாலை, பெருங்குடி, மதுரை - 22, 94456 00561.

## ஆரவாரமின்றி ஓர் தாவரவியல் பூங்கா! : பத்தே ரூபாயில் மலர் காட்சி

கோவையிலுள்ள வேளாண் பல்கலை கழகத்தில், தாவரங்களை பற்றி தெரிந்து கொள்ள தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதில் அனைத்து வகை தாவரங்களையும் முழுமையாகவும், எளிதாகவும் தெரிந்து கொள்ளலாம்.தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தமிழகம் முழுக்க உள்ள, 32 மாவட்டங்களையும் இணைக்கும் வகையில் முக்கிய மாவட்டங்களில், வேளாண் கல்லூரிகளை கொண்டுள்ளது. கோவை மாவட்டத்தில், அனைத்து வேளாண் கல்லூரிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில், பிரம்மாண்டமான அளவில், பல நூறு ஏக்கரில் பல்கலை அமைந்துள்ளது.

பல்கலைக் கழகத்தின் கீழ், 30க்கும் மேற்பட்ட வேளாண்துறைகள் உள்ளன. இது தவிர உழவு செய்து, புதிய பயிர்களை உருவாக்குவதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கரில் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் உள்ளன; மானாவாரி நிலங்களும் உள்ளன. இதன் ஒரு பகுதியில், பல விஷயங்களை மக்கள் தெரிந்து கொள்ள, இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டவும், வடமேற்கில், 20 ஏக்கரில் பிரமாண்டமான தாவரவியல் பூங்கா அமைந்துள்ளது. தாவரங்கள் மனிதனின் வாழ்க்கையோடு ஒன்றிப்போய்விட்டன. மனிதன் உட்கொள்ளும், உணவு, உடை, பயன்படுத்தும் பொருள் என்று அனைத்திலும், தாவரத்தின் பின்புலம் இருக்கும். அதைத்தான் மனிதன் மெல்ல அழித்து வருகிறான். இதை புரிந்து கொள்ள, வேளாண் பல்கலையில் தாவரங்களை வகைப்படுத்தி, முறைப்படுத்தி பட்டியலிட்டு மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். ஆண்டுதோறும் இரண்டு நாட்களுக்கு ஊட்டியில் மலர்கண்காட்சி நடத்தப்படுகிறது. ஆனால், வேளாண் பல்கலையில் ஆண்டுதோறும் விடுமுறை என்ற இடைவெளியில்லாமல், தாவரவியல் பூங்காவை குடும்பத்தோடு கண்டுகளிக்கலாம். பூங்காவில் மருத்துவத் தாவரங்கள், அலங்காரத் தாவரங்கள், மூலிகைத்தாவரங்கள், பல்லாண்டுத்தாவரங்கள், உணவுத்தாவரங்கள் என்று வகைப்படுத்தியுள் ளனர். கட்டுமானத்துக்கு பயன்படும் ஈட்டி, வேங்கை, தேக்கு, பில்லமருது, வெண்தேக்கு உள்ளிட்ட மரங்களும், நிழல்பரப்பும் ஆலமரம், மழையை பொழிவிக்கும் மரங்கள், ஆக்சிஜனை அதிகம் வெளியிடும் மரங்கள், கார்பன் டை ஆக்சைடு மற்றும் கார்பன்மோனாக்சைடு அதிகம் உள்ளிழுக்கும் மரங்களை பட்டியலிட்டு வைத்துள்ளனர். வறட்சியை தாங்கி, அதிக அளவு நீர்சத்தை கொண்டுள்ள மரங்கள் என்று, 200 க்கும் மேற்பட்ட மரங்களை பார்க்கலாம். அலங்காரவகைச்செடியில், குரோட்டன்ஸ் என்ற பெயரில் பல ரகங்கள் உள்ளன. அதில் மட்டும், 70 ரகங்களிலான செடிகள் உள்ளன. தாவரவியல் பூங்கா என்பதை உணர்த்துவதற்காக,

பச்சைபசேல் என்று காணப்படும் புல்வெளிகள், அதற்கு பாதுகாப்பாக முயலைப்போன்ற காதுகளை கொண்ட முயல்காதுச்செடிகள், மூலிகையில் முதல் இடம் பிடிக்கும் தொட்டால் சிணுங்கி, சர்க்கரை நோயை குணப்படுத்தும் சிறியாநங்கை, பெரியாநங்கை மற்றும் முதலுதவி சிகிச்சைக்கான மருத்துவச்செடிகளை பார்க்கலாம்.

மருத்துவத்துக்கு பயன்படும் 30 வகையான கீரைகளை பார்க்கலாம், மஞ்சள், பச்சை, வெள்ளை, சிகப்பு, ஆரஞ்சு என்று வானவில்லின் ஏழு நிறங்களில் மலர்களை கொடுக்கும் மலர்செடிகளை பார்த்து ரசிக்கலாம். இவை அத்தனைக்கும், பத்தே ரூபாய் கட்டணம். காலை 9:00 முதல், 11:00 மணி வரையும், மதியம் 2:00 முதல் 5:00 மணி வரையும் அனுமதிக்கின்றனர். ஊட்டியில் மூன்று நாட்கள் நடக்கும் மலர்கண்காட்சியை காண முட்டிமோதி, கடும் சிரமத்துக்குப்பின் செல்கிறோம். ஆனால், கோவையில் ஆரவாரமின்றி உள்ள தாவரவியல் பூங்காவுக்கு, 10 ரூபாய் கட்டணம் கொடுத்து, எளிதாக பார்க்கலாம். இங்கு குழந்தைகளை அழைத்துச்செல்லும் போது, இளைய தலைமுறையினருக்கு தாவரவியலை பற்றிய அறிவு தானாக வந்து விடும்.

**எள் சாகுபடி விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி முகாம்**

திருக்கனூர்; திருக்கனூர் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம், ஆத்மா திட்டத்தில், விநாயகம்பட்டு கிராமத்தில் எள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி முகாம் நடந்தது. வேளாண் இயக்குனர் கவிச்செல்வன் தலைமை தாங்கினார். வேளாண்துறை அலுவலர் பிரபாகரன் மற்றும் நிரஞ்சன் ஆகியோர் இயற்கை விவசாயம் குறித்து விளக்கினர். திறன் மிகு நுண்ணுயிர் தயாரிப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. சந்திரபூரணி பூச்சி விரட்டுதல் குறித்து பேசினார். முகாமில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை தொழில் நுட்ப மேலாளர் சிரஞ்சீவி, களப்பணியாளர்கள் பலராமன், ஆதி நாராயணன் செய்திருந்தனர்.

**விவசாய பணிக்கு ஆள் பற்றாக்குறை ஊரக வேலை திட்டம் நிறுத்த மனு**

நாமக்கல்: "விவசாய பணிகளுக்கு, ஆட்கள் பற்றாக்குறையை போக்கும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை, தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்' என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க பொதுச் செயலாளர் ராஜேந்திரன், கலெக்டரிடம் மனு அளித்துள்ளார். அதில், கூறியிருப்பதாவது: நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக கோடைமழை பெய்துள்ளது. அதனால், விவசாயிகள் பயிர் செய்த கரும்பு, வாழை, மரவள்ளி கிழங்கு, மக்காச்சோளம் பயிற்களில் அதிக அளவு களை முளைத்துள்து. மஞ்சள் நடவுக்கும் பின்னால், அந்த வயலில் வெங்காய சாகுபடி உடனடியாக செய்ய வேண்டி உள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டப்பணிகள் தற்போது நடந்து வருவதால், கிராமப்புறங்களில் உள்ள விவசாய தொழிலாளர், அந்த வேலைக்கு சென்று விடுகின்றனர். அதனால், விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. அதன் காரணமாக, தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை, ஒரு மாதத்துக்கு நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால், விவசாயிகள் பயனடைவர். இவ்வாறு, கூறப்பட்டுள்ளது.

**குடற்புழு நீக்க முகாம்: வரும் 29ம் தேதி துவக்கம்**

ஈரோடு: தமிழக அரசால் வழங்கப்பட்ட இலவச ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம், வரும், 29, 30ம் தேதிகளில் நடக்கிறது. தமிழக அரசால், ஏழை, எளியவர்களுக்கு இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி, ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 2011-12ல், 3,77 பயனாளிகளுக்கு, 4.81 கோடி மதிப்பில், 15,100 ஆடுகளும்,

2012-13ல், 4,246 பயனாளிகளுக்கு, 5.41 கோடி மதிப்பில், 16,984 ஆடுகளும், 2013-14ல், 3,866 பயனாளிகளுக்கு, 5.03 கோடி மதிப்பில், 15,464 ஆடுகளும், 2014-15ம் ஆண்டு, 4,838 பயனாளிகளுக்கு, 6.39 கோடி மதிப்பில், 19,352 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆடுகளின் நலனை காக்கும் வகையில், வரும், 29, 30ம் தேதிகளில், ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 2013 மே மாதம், 2015 ஏப்., மாதத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடத்தப்படுகிறது. குடற்புழு நீக்கம் செய்வதால், ஆடுகளின் உடல் எடை கூடும். நோய் எதிர்ப்பு சக்தி, இனவிருத்தி திறன் அதிகரிக்கும். ஆடுகளின் மூலம் கிடைக்கும் வருவாயும் அதிகரிக்கும். இம்முகாமை, திட்ட பயனாளிகள் பயன்படுத்தி, தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ள வேண்டும், என கலெக்டர் பிரபாகர் கேட்டுக்கொண்டார்.

## 3,300 மண் மாதிரிக்கு முடிவு வழங்கல் அதிக சாகுபடிக்கு வேளாண் துறை முயற்சி

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், ஐந்து கிராமங்கள் வீதம், இதுவரை, 3,300 கிரிட் சாம்பிள் பணி எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே, முன்னோடி திட்டமாக ஈரோட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனிதர்களுக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டசத்துக்களை போன்று, பயிர்களுக்கு, 18 வகையான சத்துக்கள் தேவைப்படுகின்றன. இந்த சத்துக்கள், குறையும் போது விளைச்சல் பாதிக்கப்படுகிறது. மண்ணின் வளத்துக்கு ஏற்ப, விவசாயத்தில் நெல், மஞ்சள், கரும்பு, எள் என்று, எந்த பயிர் சாகுபடியிலும், விவசாயிகள் அதிக மகசூல் ஈட்ட முடியும். வேளாண் அலுவலகம் மூலம் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் மற்றும் கருங்கல்பாளையத்தில் செயல்படும் மண் மாதிரி பரிசோதனை கூடத்திலும், மண் மாதிரி பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. மண் பரிசோதனைக்கு, 20 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்ட நிலையில்,

தற்போது, உற்பத்தி இலக்கை அதிகரிக்கும் பொருட்டு, இலவசமாக கிரிட் சாம்பிள் எனப்படும், மண் மாதிரி திட்டம், ஈரோடு மாவட்டத்தில் வேளாண் துறை அலுவலகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அனைத்து கிராமங்களிலும், மொத்தம், 13,500 சாம்பிள்கள் எடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை, 3,300 சாம்பிள்கள் எடுக்கப்பட்டு, விவசாயிகளுக்கு, அதிக மகசூலுக்கு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து, ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து, வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் மொத்தம், 13,500 மண் மாதிரிகள் எடுக்க இலக்கு உள்ளது. மண் மாதிரி எடுக்காமல் சாகுபடி செய்வதால், எதிர்பார்த்த சாகுபடியளவை காட்டிலும், குறைந்த மகசூலே கிடைக்கிறது. இதையடுத்து, அதிக மகசூலுக்காக, அரசு மண் மாதிரிகளை எடுத்து, அதனடிப்படையில், விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகிறது. ஆரம்பத்தில், வேளாண் உதவி அலுவலர்கள் மூலம், கிரிட் சாம்பிள் எடுக்கப்பட்டு வந்தது. தற்போது விவசாயிகளுக்கு, நேரடி விளக்கம் அளிக்கும் பொருட்டு, வேளாண் அலுவலர்களே சாம்பிள் எடுத்து வருகின்றனர். சாம்பிள் முடிவு அடங்கிய காகிதத்தை வழங்கினால், விவசாயிகளுக்கு தெளிவாக புரியாது என்பதால், விதை நேர்த்தி செய்தல், எலி பிடித்தல் உள்ளிட்ட மூன்று விதமான செயல்முறை விளக்கமும், எந்த மாதிரியான மண்ணுக்கு எவ்வளவு உரம் பயன்படுத்தினால், அதிக மகசூல் பெற முடியும் என்பது குறித்து, ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**மூன்று மாநில விவசாயிகள் கூட்டம் ஈரோட்டில் வரும் 25ல் நடத்த ஏற்பாடு**

*ஈரோடு: மூன்று மாநில விவசாயிகள் சங்க மகா பஞ்சாயத்து கூட்டம்,* ஈரோட்டில் வரும், 25ம் தேதி நடக்க உள்ளதாக, அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி தெரிவித்தார். மேலும், அவர் கூறியதாவது: இந்தியாவில், 20 நிமிடங்களுக்கு ஒரு முறை, ஒரு விவசாயி தற்கொலை செய்து கொள்கின்றனர். மூன்று லட்சம் விவசாயிகள், கடந்த, எட்டு ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 10 கோடி விவசாயிகள், விவசாயத்தை விட்டு வெளியேறி உள்ளனர். வெளியேறிய விவசாயிகள், நகரங்களில் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வருகின்றனர். தற்போது, விவசாய பொருளுக்கு கட்டுப்படியான விலைகள் இல்லை. விவசாய நிலத்தை அரசே அபகரிக்க சட்டம் கொண்டு வருகின்றனர். கெயில், மீத்தேன், கோகோ கோலா ஆலை, முல்லை பெரியாறு போராட்டங்களில் ஒருங்கிணைந்து போராடிய போது, அரசு அடி பணிந்து, அதனை விரட்டியடித்தது.

விவசாயிகள் கடனை கட்ட முடியவில்லை. கடனை ரத்து செய்ய சொன்னால், வட்டி விகிதத்தை உயர்த்துகின்றனர். விவசாய கடன்களை ரத்து செய்யாவிட்டால், லட்சக்கணக்கான விவசாயிகள், தற்கொலை செய்து கொள்ள கூடிய அபாயகரமான நிலை உருவாகும். இதை அரசு புரிந்துக்கொள்ள வேண்டும். மொத்த மக்கள் தொகையில், 70 சதவீதம் பேர் விவசாயிகள். ஆனால், அவர்களை காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. இதனால், கர்நாடகா, கேரளா, தமிழகம் ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்கும் "மூன்று மாநில மகா பஞ்சாயத்து' கூட்டம், வரும், 25ம் தேதி ஹோட்டல் ரீஜென்சியில் நடக்கிறது. இதில், விவசாயிகளை காப்பாற்றவும், தற்கொலையில்

இருந்து மீட்டெடுக்கவும், விவசாயிகள் சங்கம் போராட்டம் குறித்து, முக்கிய முடிவு எடுக்கப்படும். தவிர, மூன்று மாநில விவசாயிகளும், தங்கள் மாநில பிரச்னையில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்படும், என்றார்.

## பயிர் கப்பீடு : ஜூன் 1 முதல் பட்டுவாடா ஆகிறது... விவசாயிகளிடம் கலெக்டர் உறுதி

ராமநாதபுரம்: ""தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ்,ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2014 - 14 ம் ஆண்டில் நெல் சாகுபடி செய்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் ஜூன் 1 முதல் காப்பீட்டு தொகை வழங்கப்படும்," என கலெக்டர் உறுதியளித்துள்ளார். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் நந்தகுமார் தலைமை யில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கனகராசன் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். கூட்டம் துவங்கியதும் முன் வரிசையில் இருந்த விவசாயிகள் எழுந்து, ""பயிர் காப்பீட்டு தொகை எந்த தேதியில் வழங்கப் படும்," என கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்து கலெக்டர் பேசுகையில்,""விவசாயிகளுக்கு ரூ.296 கோடி காப்பீடு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பங்களிப்பு தொகையாக ரூ.178 கோடி வந்துள்ளது. மத்திய அரசின் பங்களிப்பு தொகை ரூ.118 கோடி இதுவரை வரவில்லை. இம்மாத இறுதிக்குள் வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நிதி வந்ததும் ஜூன் 1முதல் காப்பீட்டுத்தொகை பட்டுவாடா செய்யப்படும். பயனாளிகளின் பெயர், பயிர் சாகுபடி பரப்பளவு, காப்பீட்டு தொகை, எந்த தேதியில் வழங்கப் படும் என்பது பற்றிய முழு தகவல்கள் அடங்கிய போஸ்டர்கள் அல்லது டிஜிட்டல் போர்டுகள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் முன் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்படும்,"

என்றார்.பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி உள்ளிட்ட பகுதிகளில் மாற்று பயிராக விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்திருந்தனர். சமீபத்தில் பெய்த கோடை மழையால் பருத்தி செடிகள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு சார்பில் நிவாரண உதவி வழங்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.இதற்கு பதிலளித்த கலெக்டர், ""மாவட்டத்தில் பருத்தி பயிர்களுக்கு இதுவரை நிவாரண உதவி வழங்கியதில்லை. இருந்தாலும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் கோரிக்கை அரசின் கவனத்துக்கு எடுத்து செல்லப்படும்," என்றார்.

**தென்னை உற்பத்தியாளர் கம்பெனி துவக்கம்**

சிங்கம்புணரி: அ. காளாப்பூரில் தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி துவக்கப்பட்டது. சுற்று வட்டார விவசாயிகள் பங்கேற்றனர்.இந்த பகுதியில் 3000 ஏக்கரில் தென்னை வளர்க்கப்படுகிறது.தேங்காய் விளைச்சலை அதிகரிக்கவும், தேங்காயிலிருந்து தேங்காய் பூ,பால்,சிப்ஸ் தயாரித்து சந்தைப்படுத்துதல் ,வருங்காலத்தில் மத்திய,மாநில அரசு சலுகை குழுக்கள், கூட்டமைப்பிற்கு வழங்க விருப்பதால் கம்பெனி துவக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் கருத்துக்களை தெரிவித்தனர். ஊராட்சி தலைவர் சண்முக வேல் தலைமை வகித்தார்.தமிழ்நாடு வேளாண் விற்பனை துறை துணை இயக்குனர் சவுந்தரராஜன் வேளாண்மை அலுவலர்கள் குப்புச்சாமி, ரெத்தினகாந்தி பங்கேற்றனர்.

**சிவகங்கையில் விவசாயிகள் சங்க மாநாடு**

சிவகங்கை: சிவகங்கையில் அனைத்து விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு நடந்தது. மாநில பொது செயலாளர் ஆதிமூலம் துவக்கி வைத்தார். சிவகங்கை நகராட்சி தலைவர் அர்ச்சுனன் முன்னிலை வகித்தார். மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட தலைவர் அய்யனார் பங்கேற்றனர்.

மாவட்ட தலைவராக ஆரோக்கியசாமி, செயலாளர் முருகன், பொருளாளர் மாரிமுத்து, துணை தலைவர் ஜெயராமன், ஜெகநாதன், பாண்டி, துணை செயலாளர்கள் செல்லமுத்து சேதுபதி, மாணிக்கம், கோட்டைச்சாமி தேர்வு செய்யப்பட்டனர்.
தீர்மானம்: அதப்படக்கி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 400 பவுன் கொள்ளை நடந்தது. இதில், பல்வேறு முறைகேடு நடந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே, கூட்டுறவு கடன் சங்க முறைகேடு குறித்து சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிடவேண்டும். கமிஷன்: மாவட்ட அளவில் 87 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நகை அடமானம் இன்றி கடன் பெற்ற 45 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிர் இழப்பீடு தொகை ரூ.62 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த இழப்பீடு தொகைக்கு கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிடம் கமிஷன் கேட்கின்றனர். எந்தவித கமிஷன் இன்றி விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை கிடைக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தீர்மானித்தனர்.

## தொடர் மழையால் நிரம்பியது பிளவக்கல் அணை : கோடை நெல்சாகுபடிக்கு திறக்க ஏற்பாடு

வத்திராயிருப்பு: மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த கனமழை, தொடர்மழை காரணமாக பிளவக்கல் பெரியாறு அணை நிரம்பியது. இதனால் கோடை நெல் சாகுபடிக்கு அணையை திறக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.
வத்திராயிருப்பு அருகே மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகள். கடந்த இருவாரங்களுக்கு முன்பு வரை கடும் வெயில் காரணமாக வறண்ட நிலையில் இருந்தன. இதில் பெரியாறு அணையில் மட்டும் மீன் வளர்ப்புக்காக 10 அடிக்குள் நீர் தேக்கி வைக்கப்பட்டது. அதுவும் வேகமாக வற்றத்துவங்கியதால் 5 அடி நீர் மட்டுமே இருப்பு இருந்தது. இந்நிலையில் அக்னிநட்சத்திரம்

துவங்கியதால் மீன்வளர்ப்புக்கு பெரும் சிக்கலான நிலை ஏற்பட்டது. எதிர்பாராத சூழ்நிலையில் மலைப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்யத்துவங்கியதால் மலை ஓடைகள், ஆறுகளிலிருந்து இரு அணைகளுக்கும் நீர்வரத்து துவங்கியது. இதன்காரணமாக அணையின் நீர்மட்டம் மெல்ல உயரத்துவங்கியது. நேற்றுடன் பெரியாறு அணை அதன் முழு உயரமான 48 அடியில் நீர்மட்டம் 44 அடியை எட்டியது. வழக்கமாக அணையின் பாதுகாப்பு கருதி இதற்கு மேல் தண்ணீர் தேக்கப்படுவது இல்லை. இதன் பிறகு அணைக்கு வந்து சேரும் நீர் அப்படியே பாசன மதகு வழியாக வெளியேற்றப்படும். ஆனால் தற்போது அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 14.84. கனஅடி என்ற வீதத்தில் வெகுவாக குறைந்து விட்டதால் நீர்மட்டமும் அத்துடன் நின்றது. 42 அடி உயரமுள்ள கோவிலாறு அணையில் தற்போது 25 அடிநீர் இருப்பு உள்ளது. இங்கு நேற்றுடன் நீர்வரத்து முற்றிலுமாக நின்றது. இதனால் இங்கு நீர்மட்டம் உயர இதற்குமேல் வாய்ப்பு இல்லை. இரு அணைகளிலும் ஓரளவு நீர் இருப்பு உள்ளதால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கோடை நெல்சாகுபடிக்காக நீர்திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடனுக்கு முன்னுரிமை குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**



திண்டுக்கல்,

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஹரிகரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் பழனிவேல், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில்வேலன், வேளாண்மை உதவி இயக்குனர் கார்த்திகேயன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் பாண்டியன், உதவி இயக்குனர் கிஷோர்குமார் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். அதன் விவரம் வருமாறு:- பயிர்க்கடன் வேண்டும்

கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன்களை அதிகமாக கொடுக்கின்றனர். விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர்க்கடன் வழங்க முன்னுரிமை அளிக்க வேண்டும். புதிய கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கும் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் கடனுக்கான வட்டியை குறைக்க வேண்டும். தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் காய்கறி விதைகளை உரிய நேரத்தில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் வழங்க வேண்டும். ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கான கட்டணம் அதிகமாக இருக்கிறது. அது விவசாயிகளை அதிகமாக பாதிக்கிறது. விவசாயிகளின் நலன்கருதி ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கான கட்டணத்தை குறைக்க வேண்டும். ரெட்டியார்சத்திரம் அருகேயுள்ள அய்யன்குளத்திற்கு மாங்கரைகுளத்தில் இருந்து தண்ணீர் வரும் கால்வாய் ஆக்கிரமிப்பால் காணாமல் போய்விட்டது. இதனால் குளத்திற்கு தண்ணீர் வரவில்லை. கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். அணையில் தடுப்புச்சுவர் விளைபொருட்களுக்கு விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதை தவிர்க்க கூட்டுறவு பண்டக சாலைகளில் சோப்பு, தேயிலைத்தூள் விற்பதை போன்று, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளையும் மொத்தமாக வாங்கி விற்பனை செய்ய வேண்டும்.

பழனி பாலாறு அணைக்கு தண்ணீர் வரும் பகுதியில் தடுப்புச்சுவர் கட்டடப்பட்டு இருக்கிறது. இதனால் அணைக்கு குறைவான அளவே தண்ணீர் வருகிறது. பழனி பகுதியில் நல்ல மழை பெய்தும் அணையின் நீர்மட்டம் உயர்வது தாமதமாகிறது. மேலும் 30 அடி அகலமுள்ள வரத்து கால்வாய் ஆக்கிரமிப்பால் 4 அடியாக குறுகிவிட்டது. அணைக்கு கூடுதல் தண்ணீர் வரவும், கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக்கிரமிப்புகள் : பழனி கோம்பைபட்டியில் தனியார் ஆக்கிரமிப்பால் விவசாய நிலத்திற்குள் மழை வெள்ளம் புகுந்து விடுகிறது. இதை தடுக்க ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

குஜிலியம்பாறையில் கண்வலி கிழங்கு பயிரிட்ட 37 விவசாயிகளுக்கு மானியம் வழங்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு விரைவாக மானியம் வழங்க வேண்டும். மாவட்டம் முழுவதும் பல்வேறு குளங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. மேலும் குளங்கள் தூர்வாரப்படாததால் அதிகமான தண்ணீரை சேமிக்க முடியவில்லை. எனவே, குளங்களை தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மேற்கண்டவை உள்பட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர். நடவடிக்கை : இதற்கு கலெக்டர் ஹரிகரன் பதில் அளித்து பேசுகையில், விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாலாறு அணையில் கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவரை அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் வரத்து கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஆழ்துளை கிணறுகள் அமைப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் விரைவில் நடத்தப்படுகிறது. அந்த கூட்டத்தில் விவசாயிகளும் பங்கேற்கலாம். அதில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பது தொடர்பான கட்டணம் பற்றி முடிவு எடுக்கப்படும். குளம், கால்வாய் ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கூறினார்.

**பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியாக உயர்வு: கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்தல்**

நாகர்கோவில்,

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியாக உயர்ந்ததைத் தொடர்ந்து, இந்த அணை தண்ணீர் பாய்ந்தோடும் கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

நீர்வரத்து குறைந்தது : குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வந்தது. இதற்கிடையே 2 நாட்களாக மழை ஓய்ந்திருந்தது. நேற்று காலையில் நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மீண்டும் சாரல் மழை தொடங்கியது. இந்த மழை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக பெய்திருந்தது. நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் குளச்சல் பகுதியில் 24.2 மி.மீ. மழையும், பாலமோர் பகுதியில் 7.5 மி.மீ. மழையும் பதிவாகியிருந்தது. மழை குறைந்தததால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்தும் குறைந்தது. நீர்மட்டம் பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 458 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 446 கன அடி தண்ணீரும், சிற்றார்-1 அணைக்கு 141 கன அடி தண்ணீரும், சிற்றார்-2 அணைக்கு 18 கன அடி தண்ணீரும், சிற்றார்-2 அணைக்கு 18 கன அடி தண்ணீரும், பொய்கை அணைக்கு ஒரு கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 18 கன அடி தண்ணீரும் நேற்று காலை நிலவரப்படி வந்து கொண்டிருந்தது. இதனால் பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 39.60 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 70.95 அடியாகவும், சிற்றார்-1 அணை நீர்மட்டம் 17.06 அடியாகவும், சிற்றார்-2 அணை நீர்மட்டம் 17.16 அடியாகவும், பொய்கை அணை நீர்மட்டம் 9.10 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 54.12 அடியாகவும் உள்ளன. வெள்ள அபாய எச்சரிக்கை : 18 அடி கொள்ளளவு கொண்ட சிற்றார் அணைகளின் நீர்மட்டம் 17 அடியை தாண்டியிருப்பதால் சிற்றார்-1 அணையில் இருந்து 129 கன அடி தண்ணீர் உபரியாக திறந்து விடப்படுகிறது. மாம்பழத்துறையாறு அணையும் நிரம்பியுள்ளதால் இந்த அணைக்கு வரும் தண்ணீர் 18 கன அடி தண்ணீர் அப்படியே உபரியாக திறந்து விடப்படுகிறது. 77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி

அணையின் நீர்மட்டம் நேற்று 71 அடியை எட்டியது. இந்த அணையின் நீர்மட்டம் 71 அடியை நெருங்கியதும் இந்த அணை தண்ணீர் பாய்ந்தோடும் கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை கொடுக்கப்படுவது வழக்கம். இதேபோல் நேற்று மாலையில் வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. அப்போது கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

**மழை நீரில் மூழ்கிய பயிர்களை காப்பாற்றுவது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்**




நாகர்கோவில், மழை நீரில் மூழ்கிய பயிர்களை காப்பாற்றுவது எப்படி? என்பது குறித்து ராஜாக்கமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் எம்.ஆர்.வாணி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-பயிர்கள் மூழ்கின : குமரி மாவட்டத்தில் பொதுவாக ஆண்டுதோறும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை இயல்பாக கிடைக்கப்பெற்று வருகிறது. ஆனால் தற்போது வெப்ப சலனத்தால் உருவாகிய மழை ஏழு நாட்கள் வரை நீடித்து பெய்து வருகிறது. இதில் சில நாட்களில் அதிகமாக மழை பெய்துள்ளது. அதன் காரணமாக வயல்களில் நீர்தேங்கி நெல் பயிர்

முழுமையாக மூழ்கிய நிலையில் உள்ளது.ராஜாக்கமங்கலம் வட்டாரத்தில் பறக்கை மற்றும் புத்தேரி பகுதிகளில் பெய்த மழையினால் நெல் பயிர் மூழ்கியுள்ளது. தற்போது மழையின் வீரியம் குறைந்து பாசன நீர் வடிந்து வருகிறது. எனவே நீரில் மூழ்கிய நிலங்களில் போதிய வடிகால் வசதி செய்து தேவையான நீரை மட்டும் தேக்கி பராமரித்தல் இன்றியமையாததாகும். மகசூலை அதிகரிக்க... இந்த வகை பாதிப்புக்குள்ளான நெற் பயிர் வளர்ச்சி குன்றியும், இலைகளில் பச்சையம் விளறியும் காணப்படும். நீரில் பயிர் மூழ்கியிருக்கும் நிலையில் பயிருக்கு தேவையான பிராணவாயு கிடைக்காததாலும் பச்சையம் உருவாக்கும் திறன் வெகுவாக குறைக்கப்படுவதாலும் வேரின் வளர்ச்சி குன்றிய நிலையில் பயிருக்கு தேவையான முக்கிய சத்துக்கள் பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படுகிறது. இதனால் பயிர் வளர்ச்சி குன்றி இலைகள் பச்சயம் குறைந்து காணப்படும். இந்தநிலையில் பயிர் நீடித்து வளர்ந்தால் பயிரில் மகசூல் இழப்பு ஏற்பட காரணமாக அமையும். எனவே இத்தகைய குறைபாட்டை வயலில் கண்ட அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்ட வயலுக்கு ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் மற்றும் 18 கிலோ பொட்டாஷ் உரம் கலந்து மேலுரமாக இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு யூரியா 15-20 கிலோ மேலுரமாக இட வேண்டும். பயிர்களில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் நுண்ணுயிரினை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். இந்த முறைகளை பின்பற்றுவதால் அதிக சிம்புகள் உருவாகி பச்சையம் முழுமையாக வளர்ச்சி பெறுகிறது. இதனால் எந்தவித மகசூல் இழப்பும் ஏற்படாமல் நெல் பயிரை காப்பாற்றலாம்.இவ்வாறு பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.

**ஏலகிரிமலையில் கோடை விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து கலெக்டர் ஆய்வு**



ஜோலார்பேட்டை, ஏலகிரிமலையில் நடக்க இருக்கும் கோடை விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து, அதிகாரிகளுடன் மாவட்ட கலெக்டர் நந்தகோபால் ஆய்வு நடத்தினார். கலெக்டர் ஆய்வு : ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏலகிரிமலையில் வருகிற 30, 31 ஆகிய தேதிகளில் (சனி, ஞாயிற்றுக்கிழமை) 2 நாட்கள் கோடை விழா நடைபெற உள்ளது. இந்த கோடை விழா பணிகளை துரிதப்படுத்துவதற்காக மாவட்ட கலெக்டர் நந்தகோபால் நேரில் சென்று ஆய்வு செய்தார். கோடை விழாவை முன்னிட்டு, பந்தல் அமைக்கும் இடம், பல்துறை விளக்க கண்காட்சி அமைக்கும் இடம், மலர் கண்காட்சி அமைக்கும் இடம் போன்ற பணிகளை ஆய்வு செய்தார். இயற்கை பூங்காவில் மலர் கண்காட்சியும், பொதுமக்கள் பயன்படுத்தும் படகு குழாமில் கூடுதல் படகுகள் இயக்கவும், சாலைகளை செப்பனிடவும், குழந்தைகள் விளையாடும் பூங்காவில் விளையாட்டு உபகரணங்களை சரி செய்யவும் ஆலோசனை வழங்கினார். உணவு திருவிழா : மேலும் இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக உணவு திருவிழா 2 நாட்கள் நடத்த ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார். பாரம்பரிய உணவு வகைகள், நவீன உணவு வகைகள் இந்த திருவிழாவில் இடம் பெறவும், கோடை விழாவில் கலை

நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், கலை பண்பாட்டு கலைநிகழ்ச்சிகள் என 2 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை கேட்டறிந்தார்.ஆய்வின்போது, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மனோகர்சிங், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் சேகர், ராமகிருஷ்ணன் உள்பட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

தினகரன்

மேட்டூர் அணை நீர்மட்டம் 70 அடியானது



மேட்டூர் : மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று மீண்டும் 70 அடியை எட்டியது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வந்த தொடர் மழையால், கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகளவில் இருந்தது. தற்போது மழை குறைந்ததால், கடந்த 2 நாட்களாக நீர்வரத்து சரிந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 7050 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, நேற்று 5991 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்து அதிகளவில் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

நேற்று முன்தினம் 69.80 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 70.33 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 37.98 டிஎம்சி.

கோடை மழை எதிரொலி ஈச்சம்பாடி அணை நிரம்பியது உழவுப்பணிகளில் விவசாயிகள் தீவிரம் தர்மபுரி: தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. இதையொட்டி இரு மாவட்டங்களில் உள்ள அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் சின்னாறு அணை 19.58 அடி, தொப்பையாறு அணை 5.57 அடி, நாகாவதி அணை 3.6 அடி, கேசரிகுளிஅள்ளா அணை 16.4 அடி, வரட்டாறு அணை 15.10 அடி என நீர்மட்டம் உள்ளது. கம்பைநல்லூர் அருகே ஈச்சம்பாடி அணை 17.35 அடி நிரம்பியுள்ளது. அணைக்கு வரும் நீர்வரத்து 114 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதே போல், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளிலும் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி அணை 50.75 அடி, கெலவாரஅள்ளி அணை 41.98 அடி, பாரூர் அணை 7.7 அடி என நீர்மட்டம் உள்ளது. கிருஷ்ணகிரி அணையில் 91 சதவீதம் நீர் நிரம்பியுள்ளது. தொடர்ந்து தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதை தொடர்ந்து ஆடிபட்ட விதை விதைப்பு மற்றும் நெல் நாற்று நடவும் பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் காந்திஜி சேவாலயம் மற்றும் நியூஸ் நெட்வொர்க் சார்பில் மண் வளம் காக்கும் வேளாண்மையும், மறு விளைவில்லா மருத்துவமும் என்ற இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு பாலக்கோடு காந்திஜி சேவாலயத்தில் நடந்தது. இதில், கரகதஅள்ளி ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். புலிகரை ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். சரளா வரவேற்றார். இவ்விழாவில் கிருஷ்ணன் பேசுகையில், நமது நாட்டில் விவசாயத்தில் இயற்கை

விவசாய முறையை கடைப்பிடித்து, நம் உடல் நலம் காக்க முன் வரவேண்டும். தொழு உரம், மண்புழு உரம் போட்டு மரம் செடிகள், பயிர்களை வளர்த்தால் செழிப்பாக வளரும் ' என பேசினார். விழாவில் கனம் தவசி, பழனியம்மாள், சென்றாயன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முருகேஸ்வரி நன்றி கூறினார். கிருஷ்ணகிரி, கெலவரப்பள்ளி அணைகளுக்கு நீர்வரத்து சரிவு கிருஷ்ணகிரி: தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைவால் கெலவரப்பள்ளி, கிருஷ்ணகிரி அணைகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. நேற்று முன்தினம் கெலவரப்பள்ளி அணைக்கு வினாடிக்கு 617 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நேற்று வினாடிக்கு, 568 கனஅடியாக சரிந்தது. ஆனால், 44 அடியில், 42 அடியை எட்டி விட்டதால், அணைக்கு வரும் 568 கனஅடி தண்ணீரும் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்படுகிறது. இதே போல் கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம், 50.75 அடியாக இருந்தது. நேற்று முன்தினம் வினாடிக்கு 568 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 515 கனஅடியாக குறைந்தது.

விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கடலூர், : மே மாதம் நடைபெறும் விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனை கூட்டம் வருகிற 29ம் தேதி கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பொதுமக்கள் குறைதீர்வு அரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை, கோரிக்கைகளை வைக்க வாய்ப்பு வழங்கப்படும். கூட்ட அரங்கில் தங்களது கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 10.30 மணிக்குள் தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்க உள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விவசாயிகள் தங்களின் கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம். இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும்,

மேலும் தொடர்நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை அலுவலர் பணிக்கு ஜூன் 1 ந்தேதி நேர்முகத்தேர்வு**

சென்னை, தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களுக்கான தேர்வு எழுதியவர்களுக்கு வரும் 1 ந்தேதி முதல் நேர்முகத்தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: 2013-2014-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பணியில் அடங்கிய தோட்டக்கலை அலுவலர் பதவியில் உள்ள 183 காலிப்பணியிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இதற்கான எழுத்துத் தேர்வு கடந்த மார்ச் 16 ந்தேதி நடைபெற்றது. இதற்கான சான்றிதழ் சரிபார்ப்பு 605 விண்ணப்பதாரர்களுக்கு 30.03.2015 முதல் 01.04.2015 வரை, 06.04.2015 மற்றும் 07.04.2015 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின் 361 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர். நேர்முகத் தேர்வு எதிர்வரும் 01.06.2015 முதல் 04.06.2015 வரை சென்னை பிரேசர் பாலச் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது. விண்ணப்பதாரர்கள், மேற்படி அழைப்புக் கடிதத்தை தேர்வாணைய இணைய தளத்திலிருந்தும் (www.tnpsc.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**உணவு தானிய விரயம் முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது_: மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தகவல்**

கடந்த ஓராண்டில் உணவு தானிய விரயம் முற்றிலும் குறைக்கப் பட்டுள்ளதாக மத்திய உணவு, பொது விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் கூறினார்.

தஞ்சையில் இந்திய உணவுக் கழக (எஃப்.சி.ஐ.) அருங்காட்சி யகம் மற்றும் அலுவலகக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற ராம் விலாஸ் பாஸ்வான் செய்தியாளர்களிடம் கூறியது: நாட்டில் சேமிப்புக் கிடங்கு களில் உபரியாக உள்ள 50 லட்சம் டன் உணவு தானியங்களை சந்தைப்படுத்தவும், பழங்கள், காய்கறிகளை பிற மாநிலங்களில் தடையின்றி விற்பனை செய்யவும், கோதுமை, வெங்காயம், பயறு வகைகளை வரியின்றி இறக்குமதி செய்யவும், அரிசி, உளுந்து, துவரம்பருப்பு ஆகியவற்றை ஊக வணிகத்தில் ஈடுபடுத்த தடை விதிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புத்தகம் எழுதுவேன்**

பல்வேறு பிரதமர்கள் தலை மையிலான அரசில் நான் அமைச்சராகப் பங்கேற்றுள்ளேன். பிரதமர் மோடியை பிறருடன் ஒப்பிட்டுப் பேசுவது இப்போது தேவையற்றது. நான் அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், புத்தகம் எழுதும்போது இதுபற்றி குறிப்பிடுவேன்.

நான் அமைச்சராவதற்கு முன்னர், இந்திய உணவுக் கழக கிடங்குகளில் தானிய இழப்பு 2 சதவீதமாக இருந்தது. இது, மிகப்பெரிய இழப்பு. நவீன கிடங்குகள், முறையாகக் கையா ளுதல், இயந்திரமயமாக்குதல் ஆகியவற்றால் விரயம் 0.04 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

நவீன தானிய சேமிப்பு பெருங் குடுவைகள் (சைலோஸ்), புதிய தொழில்நுட்பங்கள், சிசிடிவி கண்காணிப்பு மூலம் இழப்புகள், முறைகேடுகள் தடுக்கப்படுகின் றன. பொது விநியோகத்தில் உள்ள குறைபாடுகளைக் களையவும் விரைவான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

1986-ல் கொண்டுவரப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை பலப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதற்காக, நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளின் ஆலோசனைக் கூட்டம் வரும் 29-ம் தேதி டெல்லியில் நடைபெறவுள்ளது. வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டத் திருத்தம் கொண் டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவுப் பாதுகாப்பு சட்டத்தில் ஏற்கெனவே இருக்கின்ற சட்ட விதிகளை நடைமுறைப் படுத்துவதே எங்களது முதல் பணி என்றார்.___

Keywords: உணவு தானியம், விரயம் முற்றிலும் குறைப்பு, மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தகவல்

**குன்னூரில் இன்று 57-வது பழக்காட்சி தொடக்கம்_: 500 கிலோ திராட்சையில் காட்டெருமை வடிவமைப்பு**



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்காட்சிக்காக திராட்சைகளை கொண்டு வடிவமைக்கப்படும் காட்டெருமை. படம்: ஆர்.டி.சிவசங்கர்.

குன்னூரில் 57-வது பழக்காட்சி இன்று தொடங்குகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவர 500 கிலோ திராட்சை கொண்டு காட்டெருமை வடிவமைக்கப்படுகிறது.

நீலகிரியில் கோடை விழாவை முன்னிட்டு, கோத்தகிரியில் காய்கறி காட்சி, கூடலூரில் வாசனை திரவியப் பொருட்கள் காட்சி, உதகையில் ரோஜா காட்சி மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்காட்சி, இன்றும் நாளையும் நடக்கிறது.

பழக்காட்சிக்காக பூங்காவில் டேலியா, மேரிகோல்டு, சால்வியா, பெடூனியா, பான்சி, லில்லியம்ஸ் உட்பட 50 ரகங்களில் 1.5 லட்சம் மலர்ச்செடிகள் நடவு செய்யப் பட்டன. இந்த செடிகள் தற்போது பூத்துக் குலுங்குகின்றன.

பழக்காட்சிக்காக 500 கிலோ திராட்சை பழங்களை கொண்டு காட்டெருமை மற்றும் அதன் குட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பழங்களைக் கொண்ட ரங்கோலி வடிவமைக்கப்படுகிறது.

நுழைவு வாயிலில் பழங்களால் ஆன அலங்கார நுழைவு வாயில், தோட்டக்கலைத் துறை அரங்கம், காட்சி அரங்கங்கள் மற்றும் போட்டி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

பழக்காட்சியில், நீலகிரி மாவட்ட த்தின் முக்கிய பழப்பயிர்களான பிளம்ஸ், பீச், பேரி, ஸ்ட்ராபெரி, ஆப்பிள், பெர்சிமன், துரியன், கிரேப் புரூட், லிச்சி, ரம்புட்டான், மங்குஸ்தான், வெல்வெட் ஆப்பிள் ஆகியவை காட்சிப்படுத்தப்படும்.

இந்தாண்டு தோட்டக் கலைத்துறை சார்பில் திருநெல் வெலி, திருச்சி, தேனி, கன்னியா குமரி ஆகிய 4 மாவட்டங்களிலிருந்து சமவெளிப் பிரதேச பழங்களைக் கொண்டு காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளன._

Keywords: 57-வது பழக்காட்சி தொடக்கம்_, 500 கிலோ திராட்சை, காட்டெருமை வடிவமைப்பு__ பனாரஸ் பட்டு வளர்ச்சிக்கு

மத்திய ஜவுளித்துறை முயற்சி_ பிரபல ‘ஆடை வடிவமைப்பாளர் கள்’ உதவியுடன் பனாரஸ் பட்டு கைத்தறி சேலைகள் விற்பனை வளர்ச்சிக்கு மத்திய ஜவுளித் துறை திட்டமிட்டு வருகிறது. பனாரஸ் பட்டுச் சேலைகள் மீதான மோகம் சமீபகாலமாக குறைந்து வருவதால் ‘மேக் இன் இந்தியா’ திட்டத்தின் கீழ் அதை மீண்டும் பிரபலப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் காசி என்கிற வாரணாசி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் பல நூற் றாண்டுகளாக கைத்தறி மற்றும் விசைத்தறிகளால் பனாரஸ் பட்டுச் சேலைகள் தயாராகி வருகின்றன.

உலகப் புகழ் பெற்ற இந்த சேலைகளின் முக்கியத்துவம் தற்போது குறைந்து வருவதுடன், அதன் விற்பனையிலும் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவதை தடுக்க மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இதற்கு வாரணாசி, பிரதமர் மோடியின் மக்களவை தொகுதியாக இருப் பதும் முக்கிய காரணம் ஆகும்.

இதற்கான முயற்சியில் பாரதிய ஜனதாவின் தேசிய நிர்வாகியும் பேஷன் டிசைனருமான என்.சி.ஷைய்னா இறங்கியுள்ளார். இதையொட்டி அவர், மத்திய ஜவுளித்துறை அமைச்சரான சந்தோஷ் கங்வாரை அண்மையில் டெல்லியில் சந்தித்து பேசினார். இதுகுறித்து ’தி இந்து’விடம் ஷைனா கூறும்போது, “பெண் களிடையே சுடிதார் அணியும் பழக்கம் பரவலாக அதிகரித்துள்ள தால், 9 கெஜம் பட்டுச் சேலை களின் பயன்பாடு குறையத் தொடங்கியுள்ளது. இதனால் நெசவாளர்கள் பாதிக்கப்படுவதால், அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பது குறித்து அமைச்சருடன் ஆலோசனை நடத்தினேன். இந்த ஆலோசனையில், பனாரஸ் பட்டுச் சேலைகளை ‘மேக் இன் இந்தியா’ திட்டத்தின் கீழ் பிரபலப்படுத்தும் பணியில் பிரபல பேஷன் ஜவுளி டிசனைர்களான ரித்து குமார், மணிஷ் மல்ஹோத்ரா, சந்தீப் கோஷ்லா, ஸ்ருதி சஞ்சேட்டி, அனிதா டோங்ரே, ரினா டாக்கா உள்ளிட்ட பலரை ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டது” என்றார்.

‘மேக் இன் இந்தியா’ திட்டத்தின் கீழ் மேலும், பல நெசவுத் தொழிற்சாலைகளும் வாரணாசியில் அமைக்கப்பட உள்ளன. இதில், தயாரிக்கப்படும் பனாராஸ் பட்டுச் சேலைகளின் கைத்தறி நெசவாளிகளுக்கு உரிய கூலி கிடைக்கும் வகையிலும் அதன் விலை நிர்ணயம் செய்யப்பட உள்ளது. இந்த சேலைகள் பிரபல ஆடை வடிவமைப்பாளர்கள் வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டு, அவற்றுக்கு அரசு செலவில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் விளம்பரம் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பனாரஸ் பட்டு கைத்தறி நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் தயாரிப்பாளர்களின் சேலைகளை பிரபலப்படுத்தும் முயற்சியிலும் அரசு உதவ இருக்கிறது. இதற்காக தனியார் நெசவாளர்களிடமும் ஷைனா ஏற்கெனவே பேச்சு நடத்தியுள்ளார்.____

Keywords: பனாரஸ் பட்டு வளர்ச்சி, மத்திய ஜவுளித்துறை முயற்சி_, பனாரஸ் பட்டு கைத்தறி சேலைகள்

**ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க புதிய அரிசி__: சத்தீஸ்கர் விஞ்ஞானிகள் சாதனை**



பழங்குடி மக்கள் அதிகமாக உள்ள சத்தீஸ்கர் மாநிலத்தில் நிலவும் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க புதிய அரிசி ரகம் ஒன்றை அம்மாநில விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இந்தப் புதிய ரகத்துக்கு 'சத்தீஸ்கர் ஸிங்க் ரைஸ் 1' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தியாவில், துத்தநாகம் கொண்டு உயிரி ஊட்டம் கூட்டப்பட்ட முதல் அரிசி ரகம் இதுவேயாகும்.

புதிய ரக விதைகளை அறிமுகப் படுத்தும் மாநில ஆணையத்தால் கடந்த மார்ச் மாதம் இந்த அரிசி ரகம் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்து வரும் பருவத்தில் இந்த ரகத்தைப் பயிர் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று இந்திரா காந்தி வேளாண்மைப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த பேராசிரியர் கிரிஷ் சந்தெல் தலைமையில் உருவாக்கப் பட்ட 2 புதிய அரிசி வகைகளில் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுகுறித்து சந்தெல் கூறும் போது, "தற்சமயம் இந்தப் புதிய ரகத்தின் விதைகள் 100 கிலோ எங்களிடம் உள்ளன. இவற்றை 10 ஏக்கர்களில் பயிரிட்டு இதன் கையிருப்பை அதிகப்படுத்த திட்ட மிட்டுள்ளோம். இந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் இந்த விதைகளை மாநிலத்தில் உள்ள சுமார் 5 ஆயிரம் விவசாயி களுக்கு வழங்க உள்ளோம். அடுத்த பருவத்தில் இருந்து பயிரிட முடிவு செய்துள்ளோம்" என்றார்.

Keywords: ஊட்டச்சத்து குறைபாடு, புதிய அரிசி__, சத்தீஸ்கர் விஞ்ஞானிகள் சாதனை